DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -80/2025

Prosecution PW -3

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.ஜி.பிரேமா | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 23.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused present.

முதல் விசாரணை

நான் நாகப்பட்டிணம் போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆய்வாளர் அனிதா அவர்கள் இவ்வழக்கு குற்ற எண்.24/2022 சட்டபிரிவு 8(c), 20(b)(ii)(B) of NDPS Act ன் கீழ் வழக்கினை புலன்விசாரணை செய்து வந்த நிலையில் பணிமாறுதல் ஆகிவிட்டதால் வழக்குகோப்பினை அவருக்கு பின் பணிப்பொறுப்பேற்ற ஆய்வாளர் ரமேஷ் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். ஆய்வாளர் ரமேஷ் அவர்கள் தற்பொழுது தேர்தல் பணி சம்பந்தமாக கிருஷ்ணகிரி மாவட்டம் மாறுதல் ஆகிவிட்டதால் இவ்வழக்கில் இறுதி அறிக்கை மட்டும் தாக்கல் செய்துள்ளதால் அவரது கையொப்பம் எனக்கு பரிச்சையம் என்பதால் அரசு தரப்பில் அவருக்காக சாட்சியம் அளிக்க அனுமதி கோரியதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன். ஆய்வாளர் ரமேஷ் அவர்கள் 04.01.2023ம் தேதி இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுதெதுக்கொண்டு மாதிரி தடயத்தை இரசாயண பகுபாய்வு கூடத்திற்கு ஒப்படைத்த தலைமைக்காவலர் மகேஸ்வரி மற்றும் தடயத்தை பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கய தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் உதவி இயக்குநர் காயத்ரி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பகுப்பாய்வு அறிக்கை பெற்றுள்ளார். பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ**.9.** பின்னர் சாட்சிகள் செந்தில்குமார், முருகவேல் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இத்துடன் தன் விசாரணையை முடித்து எதிரியின் மீது பிரிவு 8(c), 20(b)(ii)(B) of NDPS Act க் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்

காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட தடயப்பொருளுக்கு தவறான நபரை இவ்வழக்கில் உட்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேலும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் அடிப்படையில் முறையான விசாரணையின்றி எதிரி காவல் அடைப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. அதைப் பின்னிட்டு வந்த ஆய்வாளர் முறையாக விசாரணை செய்யாமல் எதிரியின் மீது குற்றபத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்